தலைப்புச் செய்திகள்-

1. மக்களவைக்கு முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள தொகுதிகளில் அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் வேட்பாளர்கள் இறுதிக்கட்ட வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

2. தேர்தல் பிரச்சாரத்தின்போது பெண்களை அவமரியாதையுடன் பேசுவது ஒருபோதும் அனுமதிக்கப்பட மாட்டாது என தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

3. தமிழகத்தில் வாக்குப்பதிவு மையங்களுக்குத் தேவையான வசதிகள் மற்றும் சிறப்பு ஏற்பாடுகளை மாவட்ட நிர்வாகங்கள் முழுவீச்சில் மேற்கொண்டு வருகின்றன.

4. 2023-ஆம் ஆண்டுக்கான குடிமைப்பணி தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்பட்டுள்ளன.

5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் கொல்கத்தா அணி - ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

**[]<<<>>>[]**

மக்களவைத் தேர்தலில் முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள தொகுதிகளில் பிரச்சாரம் நாளை மாலையுடன் நிறைவடைகிறது.

இதனையடுத்து அரசியல் கட்சித் தலைவர்கள் இறுதிக்கட்ட வாக்குசேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழகத்தில் 39 தொகுதிகள் உட்பட நாடு முழுவதும் 12 மாநிலங்கள் மற்றும் யுனியன் பிரதேசங்களில் உள்ள 102 தொகுதிகளில் முதல்கட்ட வாக்குப்பதிவு வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

கடும் வெய்யிலையும் பொருட்படுத்தாது அரசியல் கட்சியினர் அனல் பறக்கும் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி மேற்குவங்கம் மற்றும் அஸ்ஸாம் மாநிலங்களில் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

மேற்குவங்க மாநிலம் **Balurghat** தொகுதியில் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், பழங்குடியினரினரின் மேம்பாட்டுக்காக தமது அரசு பல திட்டங்களை செயல்படுத்தி உள்ளதாகக் கூறினார்.

மேற்குவங்கத்தில் மட்டும் புதிதாக எட்டு பழங்குடியினர் பள்ளிகள் தொடங்கப்பட்டதாகவும், பழங்குடியினத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் இந்தியாவின் குடியரசுத் தலைவராகியுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பிஜேபி மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றால் மூன்று கோடி வீடுகள் ஏழைகள் மற்றும் பழங்குடியினருக்கு கட்டித்தரப்படும் என்றும் திரு நரேந்திரமோடி கூறினார்.

பிஜேபி மூத்த தலைவர்களான திரு ராஜ்நாத்சிங் கிருஷ்ணகிரி தொகுதியிலும், திரு வி கே சிங் நாகப்பட்டினம், திருவாரூர் தொகுதிகளிலும், அக்கட்சியின் தலைவர் திரு ஜெ பி நட்டா ராமநாதபுரம் தொகுதியிலும் பிஜேபி மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டினர்.

**[]<<<>>>[]**

கேரள மாநிலம் வயநாட்டில் பிரச்சாரம் மேற்கொண்ட காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி, தேர்தல் பத்திரத்தின் மூலம் பிஜேபி பயனடைந்துள்ளதாகக் குற்றம்சாட்டினார்.

காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படும் என்றும் அவர் கூறினார்.

ஜனநாயகத்தை பாதுகாக்க காங்கிரஸ் பாடுபட்டு வருவதாகவும் திரு ராகுல்காந்தி தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு மு க ஸ்டாலின் இன்று வடசென்னை தொகுதி வேட்பாளருக்கு ஆதரவாக வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

அப்போது பேசிய அவர், மகளிருக்கான உரிமைத்தொகை, இலவச பேருந்து பயணம், புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் அரசு கல்லூரி மாணவிகளுக்கு ஆயிரம் ஊக்கத்தொகை உள்ளிட்டவை மூலம் மகளிர் பயனடைந்து வருவதாகத் தெரிவித்தார்.

பள்ளிக் குழந்தைகளுக்கான காலை உணவுத் திட்டத்தின் மூலம் குழந்தைகள் பயனடைந்து வருவதாகவும் அவர் கூறினார்.

இன்று மாலை காஞ்சிபுரம் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் தொகுதிகளிலும் திரு மு க ஸ்டாலின் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திரு தொல் திருமாவளவன் கள்ளக்குறிச்சித் தொகுதியில் தமது கூட்டணி கட்சி வேட்பாளருக்கு வாக்கு சேகரித்தார்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி, சேலம் தொகுதியில் தமது கட்சி வேட்பாளருக்கு ஆதரவு கேட்டு பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்போது பேசிய அவர், திமுக ஆட்சியில் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

மாநிலத்தில் போதைப்பொருள் புழக்கம் அதிகரித்துள்ளதாகவும், அதனை தடுக்க திமுக அரசு தவறிவிட்டதாகவும் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டினார்.

கோவை தொகுதியில் பிரச்சாரம் மேற்கொண்ட தமிழக பிஜேபி தலைவர் திரு அண்ணாமலை, நாட்டின் வளர்ச்சிக்காகவும், உலக அமைதிக்காகவும் பிஜேபி மீண்டும் ஆட்சி அமைக்க மக்கள் ஆதரவு தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

தமிழகத்தில் வாரிசு அரசியலை திமுக முன்னிறுத்தி வருவதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

[]<<<>>>[]

தேர்தல் பிரச்சாரத்தின்போது பெண்களை அவமரியாதையுடன் பேசுவதையும், அவர்களுக்கு இழுக்கு வரும் விதத்தில் நடந்து கொள்வதையும் ஒருபோதும் அனுமதிக்கப்பட மாட்டாது என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

அது தொடர்பாக வரும் புகார்கள் மீது உடனடியாக ஆணையம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மக்களவைத் தேர்தல் நடத்தை நெறிமுறைகள் அமலுக்கு வந்த பின் அரசியல் கட்சிகளிடமிருந்து இதுவரை 200-க்கும் மேற்பட்ட புகார்கள் வந்துள்ளதாக தேர்தல் ஆணையம் இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

இதில் 169 புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் அது கூறியுள்ளது.

இதில் 51 புகார்கள் பிஜேபி-யிடமிருந்து, 59 புகார்கள் காங்கிரஸ் கட்சியிடமிருந்தும், 90 புகார்கள் மற்ற கட்சிகளிடமிருந்தும் வந்துள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

தமிழகத்தில் மக்களவைத் தேர்தல் வாக்குப்பதிவுக்கு இன்னும் இரண்டு நாட்களே உள்ள நிலையில், மாவட்ட நிர்வாகங்கள் வாக்குப்பதிவுக்கான பணிகளை தீவிரப்படுத்தியுள்ளன.

வாக்குப்பதிவு மையங்களில் தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர்களுக்கான பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன.

வாக்குச்சாவடிகளுக்குத் தேவையான பொருட்களை கொண்டு செல்வது உள்ளிட்ட பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

வாக்குச்சாவடி மையங்களில் சி சி டி வி கேமராக்களும் பொருத்தப்பட்டு வருகின்றன.

வாக்காளர்களுக்கான அடிப்படை வசதிகள் குறித்தும் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் ஆய்வு செய்து வருவதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதேசமயம் வாக்காளர்கள் 100 சதவீதம் வாக்களிப்பதை உறுதி செய்வதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன.

ராணிப்பேட்டை மாவட்டத்திற்கு உட்பட வாக்குச்சாவடிகளுக்குத் தேவையான பொருட்கள் அனுப்பப்படுவதை ஆட்சியரும், தேர்தல் அலுவலருமான திருமதி வளர்மதி ஆய்வு செய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தூத்துக்குடி தொகுதியில் தேர்தல் பணியில் ஈடுபட உள்ள அலுவலர்களுக்கான இரண்டாம் கட்ட பயிற்சி இன்று நடைபெற்றது.

கோவையில் தேர்தல் விழிப்புணர்வு குறித்து மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் குறுந்தகடு வெளியிடப்பட்டது.

சிவகங்கை தொகுதியில் 100 சதவீதம் வாக்களிப்பதை வலியுறுத்தி அஞ்சல் துறையினர் சார்பில் இன்று விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

செங்கல்பட்டு மாவட்டம் துரைப்பாக்கத்தில் கல்லூரி மாணவர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் உள்ளிட்டோர் பங்கேற்ற தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

வாக்காளர்கள் அச்சமின்றி வாக்களிப்பதை உறுதி செய்யும் விதத்தில் காவல்துறையினர், துணை ராணுவப்படையினரின் அணிவகுப்புகளும் நடைபெறுகின்றன.

**[]<<<>>>[]**

நாடு முழுவதும் முதல் முறை வாக்காளர்களை ஊக்குவிக்கும் வகையில் தேர்தல் ஆணையம் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழகத்திலும் இதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

நாமக்கல்லில் நடைபெற்ற நிகழ்ச்சியல் பங்கேற்ற கல்லூரி மாணவி அனைவரும் சுயமாக சிந்தித்து தவறாமல் வாக்களிக்க வேண்டுமென்று தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

2023-ஆம் ஆண்டுக்கான குடிமைப்பணி முதன்மை தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்பட்டுள்ளன.

மொத்தம் ஆயிரத்து 16 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

கான்பூர் ஐ ஐ டி-யைச் சேர்ந்த ஆதித்ய ஸ்ரீவஸ்த்சவ முதலிடம் பெற்றுள்ளார்.

முதல் 25 இடங்களில் பத்து இடங்களை பெண்களும், 15 இடங்களில் ஆண்களும் தேர்வு பெற்றுள்ளனர்.

தமிழகத்தைச் சேர்ந்த பிரசாந்த் அகில இந்திய அளவில் 78-வது இடத்தையும், மாநிலத்தில் முதலிடத்தையும் பிடித்துள்ளார்.

இந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வை ஆறு லட்சம் பேர் எழுதினர்.

குடிமைப்பணித் தேர்வில் வெற்றிபெற்றவர்களுக்கு பிரதமர் திரு நரேந்திரமோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் அயராத உழைப்பு காரணமாக இந்த வெற்றி சாத்தியமாகியுள்ளது என்றும், மக்கள் சேவையை மனதில் கொண்டு பணியாற்ற வேண்டுமென்றும் அவர் கூறியுள்ளார்.

நாட்டின் எதிர்காலத்தை வடிவமைக்க முன்வர வேண்டுமென்றும் பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் கொல்கத்தா அணி - ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

கொல்கத்தாவில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

சீனாவின் மக்காவ் நகரில் நடைபெற்றுவரும் உலக டேபிள் டென்னிஸ் போட்டியின் முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ஸ்ரீஜா அகுலா, மணிக்கா பத்ரா-வும் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

***End of News***